# பள்ளியில் உங்கள் வேலையையும் நேரத்தையும் உபயோகித்து தேவனுக்கு சேவை செய்யவும்

ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள், அப்போஸ்தலர் பவுல் ஆகியோர் தங்கள் கைகளால் வேலை பார்த்து வாழ்க்கைத் தேவைகளை சம்பாதித்தனர்.

**ஜெபம்:** "கர்த்தாவே! கிறிஸ்தவ ஊழியர்களுக்கு ஏன் பெரும்பாலும் இரண்டு வேலைகள் உள்ளன என்பதை சிறுவர்கள் அறிந்து கொள்ள இப்பாடத்தின் மூலம் உதவுவீராக. தங்கள் கைகளால் வேலை பார்த்து தங்கள் ஜீவனை நடத்தும், மேய்ப்பர்களாகவும், சுவிசேஷர்களாகவும் கிறிஸ்துவுக்கு பெரும்பாலானோர் சேவை செய்கின்றனர்."

குழந்தைகளுக்கான பின் வரும் கல்வி செயல்பாடுகளில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்க.

அப். 18:1-11 ல் உள்ள கூடாரத் தொழிலாளிகளின் கதையை ஒரு பெரிய குழந்தை அல்லது ஆசிரியர் வாசிக்கவும். கொரிந்து பட்டிணத்தில் தேவன் எவ்வாறு பிரிஸ்கில்லா, ஆக்கில்லா, பவுல் ஆகியோரின் கைத்திறமையை உபயோகித்து ஒரு சபையை ஸ்தாபித்தார் என்பதை அது கூறுகிறது. அவர்கள் வாழ்க்கைக்காகக் கூடாரம் செய்து சம்பாதித்தனர்.

முடியுமானால் சிறுவர்கள் இந்த படத்தை வரையட்டும் அல்லது வண்ணம் தீட்டட்டும்.



கதையைக் கூறிய பின் பின்வரும் கேள்விகளைக் கேட்கவும்.

- கொரிந்துவில் தங்குவதற்கு ஒரு இடத்தைப் பவுல் எங்கு கண்டு பிடித்தார்? (3)
- கொரிந்துவில் பவுல் எவ்வாறு தன்னைத் தாங்கிக் கொண்டார்? (3)
- யூதர்கள் தான் கூறுவதை கேட்க மறுத்த போது பவுல் என்ன செய்தார்? (6)
- கொரிந்துவில் பவுல் போதித்ததினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை? (8)
- தனது ஊழியத்தை தேவன் ஆசீர்வதிக்கிறார் என்பதைப் பவுல் எவ்வாறு அறிந்து கொண்டார்? (9-10).

### இந்தக் கதையின் பகுதிகளை நாடகமாக்குக

உங்கள் நேரத்தை செலவு செய்து குழந்தைகள் இந்த நாடகத்தை தயாரிக்க உதவுக. அதைச் சுருக்கலாம்.

**பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் கீழ்வரும் பாத்திரங்களை நடிக்கலாம்.

**கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறி பிள்ளைகள் பேச வேண்டியதை ஞாபகப்படுத்துபவர்.

**பிரிஸ்கில்லாள், ஆக்கில்லாள்:** துணியும் ஊசியும் நூலும் வைத்துக் கொள்ளவும் (அல்லது தைப்பது போல நடிக்கலாம்).

**பவுல்**

**சிறிய பிள்ளைகள்** நடிக்க வேண்டிய பாத்திரம்

**யூதர்கள்**

**கிறிஸ்பு**

**புறஜாதியார்**

## நாடகம், பகுதி 1, அப். 18:1-4

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியைக் கூறவும் (வச. 1-4). கூறுவது, "ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கூறுவதைக் கேளுங்கள்."

**ஆக்கில்லா** : பவுலுக்கு சில ஆடைகளைக் கொடுத்துவிட்டு கூறுதல், "பவுல், வந்து எங்களோடு தங்குங்கள். எங்களைப் போல கூடாரம் செய்யலாம்."

**பிரிஸ்கில்லா** : "ஆமாம். நீங்கள் கொரிந்துவில் தங்கி தேவ வார்த்தைகளைப் போதிக்க ஏதுவாக, தேவையான பணத்தை சம்பாதிக்க நாங்கள் உதவுவோம்."

**பவுல்** : "என்னைத் தாங்கிக் கொள்ள உதவுவதற்காக நன்றி. இதன் மூலம் தேவன் விரும்பும் இடங்களுக்குச் செல்லும் சுதந்திரம் எனக்குக் கிடைக்கிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும் யூதருடைய ஆலயத்தில் போய் பிரசங்கம் செய்வேன்."

## நாடகம், பகுதி 2, அப். 18:5-11

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும் (வச. 5-11). கூறவும், "யூதர்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**யூதர்கள்** : சத்தம்போட்டு, "பவுல், நீர் பேசுவதை நாங்கள் கேட்க மாட்டோம்! போய்விடுங்கள்."

**பவுல்** : துணியில் இருந்து தூசியை உதறி, கூறுதல், "உங்களுக்கும் எனக்கும் இனி எந்தப் பொறுப்பும் இல்லை. நான் புற ஜாதியாரிடம் போவேன். அவர்கள் இயேசுவைப் பற்றி கேட்க விரும்புகிறார்கள்."

**கிறிஸ்பு** : "பவுல், யூத தேவாலத்தில் இனிமேல் உம்மால் பிரசங்கம் செய்ய முடியாது. எனவே பக்கத்தில் இருக்கும் என் வீட்டுக்கு வந்து போதனை செய்யும்!"

**புறஜாதியார்** : "நாம் கிறிஸ்புவின் வீட்டில் பவுல் பேசுவதைக் கேட்போம்."

**கிறிஸ்பு** : "பவுல், நீர் போதித்த நற்செய்தியை நான் கேட்டேன். நான்தான் யூத தேவாலயத் தலைவன். ஆனால் இப்போது இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறேன். தயவு செய்து எனக்கும் என் குடும்பத்துக்கும் ஞானஸ்நானம் கொடுங்கள்."

**பவுல்** : "கொரிந்துவில் நான் தங்க எனக்கு உதவிய உங்கள் அனைவருக்கும் நன்றி. பயப்பட வேண்டாம் என்று தேவன் என்னிடம் கூறினார். ஏனெனில் அவர் அநேகம் பேரை இங்கு இரட்சிப்பார்."

**புறஜாதியார்** : "பவுல், நீங்கள் எங்களுக்கு போதிப்பதற்காக இங்கு தங்கியதற்காக நன்றி. உங்கள் குழுவின் நல்ல பணியால் நாங்கள் இப்போது இயேசுவைப் பின் பற்றுகிறோம்."

**கதைகூறுபவர்:** நாடகம் முடிந்ததைக் கூறி பிள்ளைகளக்கு நன்றி கூறவும்.

இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு **பிள்ளைகள் நடித்துக்காட்டினால்** பகுதி 1ல் உள்ள கேள்விகளை பெரியவர்களிடம் கேட்கவும். தாங்கள் வரைந்த படங்களையும், மனப்பாடம் செய்ததையும் வழங்கலாம்.

சபைத்தலைவரோடு பேசி பிள்ளைகளுக்காக ஏற்பாடு செய்ய வேண்டியவை:

- ஆராதனை வேளையின் போது நாடகத்தை அரங்கேற்றுதல்
- பாடத்தின் ஆரம்பத்தில் உள்ள கேள்விகளைக் கேட்டல்
- ஆயத்தம் செய்த கவிதை போன்றவற்றைக் கூறுதல்

**சிறுவர்களிடம் கேட்கவும்:** தேவ வார்த்தையை போதிக்கும் போது மக்கள் செய்யத்தகுந்த (கூடார வேலையைத் தவிர) வேறு வழிவகைகள் என்ன என்பதற்கு உதாரணம் தருக (பிள்ளைகள்).

**ஒரு கூடாரத்தை வரைக:**



- பிள்ளைகள் அதைப்பார்த்து வரையட்டும்.
- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவட்டும்.
- அடுத்த ஆராதனை வேளையின் போது வரைந்த படத்தை பெரியவர்களுக்குக் காட்டவும்.
- ஆக்கில்லா, பிரிஸ்கில்லா, பவுலைப் போன்று எவ்வாறு நாம் நமது திறமையை தேவனுக்காக உபயோகிக்கு முடியும் என்பதை இது சித்திரிக்கிறது என்பதை விளக்கவும்.

கிறிஸ்தவ ஊழியக் காரர்கள் தங்களைத் தாங்களே தாங்கிக் கொண்டு பிறருக்கு சேவை செய்து கிறிஸ்துவை பற்றி போதிக்கவும் முடியும் என்பதைப் பிள்ளைகளுக்கு விளக்கவும். பிற இடங்களுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்பவர்களையும் அவர்களால் தாங்க முடியும்.

**மனப்பாடம்:** 1 கொரி. 10:31

**ஒப்புவித்தல்:** 2 தெச.3:7,8,9,10 ஆகிய வசனங்களை நான்கு சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

இயேசுவை சேவித்துக்கொண்டே தங்கள் வாழ்க்கைக்காகவும் சம்பாதிக்கும் கிறிஸ்தவர்களைப் பற்றி பார்த்த ஓர் உதாரணத்தை **பெரிய பிள்ளைகள்**, கவிதை, பாடல், சிறுகதை அல்லது சாட்சியாக எழுதவும்.

**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே! நீர் எங்கள் எல்லாருக்கும் வேறு வேறு வகையான திறமைகளைக் கொடுத்திருக்கிறீர். எங்களுக்குள்ள திறமைகளை உமக்காக உபயோகிக்க உதவுவீராக. ஆக்கில்லா, பிரிஸ்கில்லா, பவுல் போல சந்தோஷமாக வேலை செய்து பிறருக்கு உதவி செய்ய போதியும்.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net